தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்,
சென்னை-6.

ந.க.எண்.031104/சி5/இ5/2022, நாள்:22.06.2022

----

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி – பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு (தொடக்கக் கல்வி உட்பட) - பணிமாறுதல் மூலம் கலையாசிரியராக பணிநியமனம் வழங்குதல் - 01.01.2022 அன்றைய நிலவரப்படி தகுதி வாய்ந்தோர் பட்டியல் கோருதல்– சார்பாக.

பார்வை: 1. அரசாணை (நிலை)எண். 283, பள்ளிக் கல்வி (எம்1) துறை, நாள். 03.11.2009.

2. அரசாணை (நிலை ) எண்.13, பள்ளிக்கல்வி(பக3(1)) துறை, நாள்.30.01.2020, அரசிதழ் எண்.36, நாள். 30.01.2020.

----

பள்ளிக் கல்வித் துறையில் அரசு பள்ளிகளில் காலி ஏற்படும் கலையாசிரியர் பணியிடங்களில் 20% ஆசிரியரல்லா பணியாளர்களுக்கு (தொடக்கக் கல்வி உட்பட) கலையாசிரியராக பணிமாறுதல் மூலம் நியமனம் அளிக்க பார்வை (1) மற்றும் (2)-ன்படி தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி சிறப்பு விதிகளில் திருத்தம் செய்து அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காணும் அரசாணை மற்றும் அரசிதழில் தெரிவித்துள்ளவாறு பள்ளிக் கல்வித் துறையில் (தொடக்க கல்வி உட்பட) பணிபுரியும் காவலர், அலுவலக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஆய்வக உதவியாளர், இளநிலை உதவியாளர், உதவியாளர் மற்றும் நூலகர் ஆகியோருக்கு 20% ஒதுக்கீடு செய்து, (காவலர் 2%, அலுவலக உதவியாளர் 2%, பதிவறை எழுத்தர் 2%, ஆய்வக உதவியாளர் 3%, இளநிலை உதவியாளர் 4%, உதவியாளர் 4% மற்றும் நூலகர் 3%) கலையாசிரியராக பணிமாறுதல் மூலம் நியமனம் அளிக்கவும் வழிவகை உள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்ட ஆசிரியரல்லாத பணியாளர்களில் கலையாசிரியர் பதவிக்கு பணி மாறுதல் பெற 01.01.2022 அன்றுள்ளபடி முழுத்தகுதி பெற்றவர்களது விவரங்களை (வருவாய் மாவட்ட அளவில் தொகுத்து) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து 15.07.2022 -க்குள் அனுப்பிவைக்குமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

பட்டியலில் இடம் பெறும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் 31.12.2021 அன்றுள்ளபடி கலையாசிரியர் பணிக்கான உரிய கல்வித் தகுதிகள் பார்வை (2)-ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணிகள் சிறப்பு விதிகளில் திருத்தம் (Rule Amendment) செய்துவெளியிடப்பட்ட அரசாணை மற்றும் அரசிதழில் ஓவிய ஆசிரியர் பணிக்கான கல்வித் தகுதிகள் குறித்து வரையறை செய்யப்பட்டுள்ளது அதன் அடிப்படையில் கல்வித் தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

Section: 48- Tamilnadu School Education Subordinate Service Special Rules.

அரசாணை(நிலை) எண்.13(1) பள்ளிக் கல்வித் துறை நாள். 30.01.2020 அரசிதழ் வெளியீடு எண்.36, நாள். 30.01.2020) Class-VI-Category-2 Artmaster.

| | | |
|---|---|---|
| Art Master | Direct recruitment Transfer and Recruitment | 1) General Qualification<br>a Pass in + 2 under 10+2 Pattern<br>and<br>2) Technical Qualification<br>Degree with Drawing and Painting of a recognized University in the state approved by UGC or its equivalent or Diploma in Painting or Diploma in Drawing of Annamalai University or A Diploma in Paintings or Commercial Arts of Modelling of the Government College of Arts and Crafts of Government Technical Examinations (Higher Grade) in free Hand outline and Model Drawing or Government Diploma in Drawing or a Certificate issued by the Tamil Nadu Institute of Architecture and Sculpture, Mamallapuram, and Technical Teachers Certificate.<br>Or<br>A Diploma in fine Arts, awarded by the Director of Technical Education or a Degree in fine Arts awarded nu the madras university of the Bharathiyar University or any other equivalent Diploma/Degree in fine Arts issued by other universities and boards recognized by University Grants commission.<br>Provided that the educational qualification 10+2 prescribed shall not apply to the candidates passed SSLC prior to 2005 and successfully undergone the Technical Teachers Certificate Examination conducted by the Director of Government Examination, Tamil Nadu. |

மேலும் பணியாளர்களின் பிறந்த தேதி, நியமன முறை, பணிவரன் முறை, தகுதிகாண்பவரும் முடித்த விவரம், கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெற்றிருப்பின் அதன் விவரம், ஒழுங்கு நடவடிக்கை நிலுவை இருப்பின் அதன் விவரம் போன்றவை உறுதி செய்து சரியாக அளிக்கப்பட வேண்டும், தகுதியற்றவர்களின் பெயர்களை பட்டியலில் சேர்த்து அனுப்பக்கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பதவி வாரியாக (காவலர், அலுவலக உதவியாளர், பதிவறை எழுத்தர், ஆய்வக உதவியாளர், இளநிலை உதவியாளர், உதவியாளர் மற்றும் நூலகர்) தனித்தனியே

பட்டியல்தயார் செய்து அளிக்கப்படவேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்களின் கல்வித் தகுதிச் சான்றுகளின் நகல் (Xerox) மற்றும் பணிவரன்முறை, தகுதிகாண்பருவம் முடித்த விவரங்கள் பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பக்கங்களின் நகல் (Xerox) ஆகியவற்றினை சான்றொப்பமிட்டு (Attested Copies) படிவத்துடன் இணைத்தனுப்ப வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தொகுப்பு பட்டியலில் வேறு எந்த தகுதிவாய்ந்த ஆசிரியரல்லாத நபரின் பெயரும் விடுபடவில்லை என முதன்மைக் கல்வி அலுவலர் சான்றளிக்க வேண்டும் முன்னுரிமைப் பட்டியலில் பெயர் விடுப்பட்டதாகத் தெரிவித்து, எந்த ஒரு பணியாளர்களிடமிருந்து முறையீடு பின்னர் ஏதும் பெறப்படின் முதன்மைக் கல்வி அலுவலர் அதற்கு முழுப்பொறுப்பேற்க நேரிடும்.

சார்ந்த மாவட்டங்களில் கலையாசிரியர் பதவிக்கு 01.01.2022 அன்றைய நிலவரப்படி தகுதிவாய்தோர் யாரும் இல்லாத பட்சத்தில் "இன்மை" அறிக்கையினை பதவி வாரியாகத் தனித்தனியாக அனுப்பிவைக்க வேண்டும் என்றும் முதன்மைக் கல்வி அலுவலருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து அதில் தவறு ஏதேனும் ஏற்படின் சார்ந்த முதன்மைக் கல்வி அலுவலரே பொறுப்பாவார் என்றும் மீண்டும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு–படிவம்

பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

24/6/22

நகல்

1) இயக்குநர்,
   தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை–6.
2) இயக்குநர்,
   மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6.
3) இயக்குநர்,
   மெட்சிக் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6.
4) உறுப்பினர் செயலர்,
   ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6, தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காவும் கனிவுடன் அனுப்பப்படுகிறது.

நகல்

முதுநிலை கண்காணிப்பாளர், பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை–6.

நகல்

இவ்வாணையரக அ2 விரிவு

உபரி நகல்–1

F:\c5\031104.docx

படிவம்

கலையாசிரியர் பதவிக்கு தகுதி பெற்றுள்ள ஆசிரியரல்லா பணியாளர்களின் 01.01.2022 நிலவரப்படியான முன்னுரிமைப்படிவம்

(பதவி வாரியாக தனித்தனி படிவத்தில் அனுப்பப்பட வேண்டும்)

| வ.எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் பள்ளி/ அலுவலகத்தின் முகவரி | பிறந்த தேதி | தற்போது வகிக்கும் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் | தகுதிகாண் பருவம் முடித்த நாள் (வேறு பதவியில் முடித்திருப்பின் எந்த பதவியில் என்பதை குறிப்பிட வேண்டும் | பொதுக் கல்வி | | கலையாசிரியர் பதவிக்குறிய கல்வித் தகுதிகள் | | | | | | | | | ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தற்போது நிலுவையில் உள்ளதா | கடந்த 5 ஆண்டுகளில் ஒழுங்கு நடவடிக்கை சட்டப்பூர்வமான தண்டனை ஏதும் பெற்றுள்ளாரா | ஓவிய ஆசிரியர் நியமனம் வழங்குவது குறித்து ஆய்வு அலுவலரின் குறிப்புரை/ பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாதம் ஆண்டு | 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாதம் ஆண்டு | Degree | month & year of passed | Name of the University Studied | Diploma | month & Year of Passed | Name of the University studied | T.T.C | Month & Year of Passed | Certificate Issued by Studied | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | |

மேற்படி விவரங்கள் அனைத்தும் பணியாளரின் பணிப்பதிவேட்டின் அடிப்படையில் சரிபார்க்கப்பட்டன விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

(அலுவலரின் ஒப்பம்)